பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 22 திங்கட்கிழமை (06-07-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 221

## புல்லாவெளிப் பகுதியில் விமானப் படையினரின்

# சீனச்சகடை விமானத்தை புலிகள் சுட்டு வீழ்த்தினர்!

### வேங்கைகளின் தீரமிகு சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 6

**புல்லாவெளிப் பகுதியில் நேற்று மாலை 4-45 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையினரின் வை-8 ரக - சீனத் தயாரிப்பான - சகடை (சிறிய) விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர்.**

**விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப் பிரிவினரே இந்த வீரச் சாதனையைப் புரிந்தனர்.**

புல்லாவெளிப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் — இராணுவத்தினருக்கும் இடையே நேற்று நேரடி மோதல்கள் இடம்பெற்ற போது மேற்படி (சிறிய) சீனச் சகடை — வை 8 ரக விமானம் தொடர்ச்சியாக பீப்பாய்க் குண்டுகளை இலக்கின்றி தள்ளிக்கொண்டிருந்தது என்றும் —

[4 ஆம் பக்கம் பார்க்க]

### விமானத்திலிருந்த 19 பேரும் உயிரிழப்பு!

**ஆனையிறவுக்கு அருகே நொறுங்கிய ஸ்ரீலங்கா விமானப்படை விமானத்தில் இருந்த 19 பேரும் உயிரிழந்தனர்.**

**பி. பி. ஸி. இன்று அதிகாலை இவ்வாறு அறிவித்தது.**

ஆயுதங்கள், வெடிகுண்டுகளை ஏற்றி வந்த இராணுவ போக்குவரத்து விமானம் நொறுங்கிய சமயம் அதில் 19 பேர் இருந்தனர் என்றும்—

அவர்கள் அனைவரும் உயிரிழந்தனர் என்றும் வடக்கு இலங்கையிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிப்பதாக பி. பி. ஸி மேலும் அறிவித்தது.

## புல்லாவெளிப் பகுதியில் நேற்று உக்கிரமான மோதல்!

### இரு டாங்கிகள் நாசம்; ராணுவத்தினர் பலர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 6

புல்லாவெளிப் பகுதியில் இருந்து நேற்றுக் காலை 5-30 மணியளவில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பெரும் எடுப்பில் முன்னேற முயன்றனர். அப்போது அவர்களுடன் புலிகள் வீராவேசத்துடன் மோதினர்.

இராணுவத்தினருக்கு உதவியாக ஸ்ரீலங்கா விமானப் படையினர் சீனச் சகடை விமானம், பொம்மர்கள், அவ்ரோக்கள் மற்றும் ஹெலிகள் பயங்கரக் குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

அதேவேளை, பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் ஏராளமான கனரக வாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறும் முயற்சியில் ஈடுபட்டனர்.

விடுதலைப் புலிகள் நடத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அலம்பிலில் படை குவிப்பு! மீண்டும் முன்னேற முயற்சி!!

மணலாறின் அலம்பில் பகுதியில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வருகின்றனர். அங்கு இராணுவத்தினர் மீண்டும் தீவிரமான முன்னேறும் முயற்சி ஒன்றில் ஈடுபடலாம் எனக் கருதப்படுகிறது.

இதற்காக ஆகாய, கடல் வழிகளின் ஊடாக ஏராளமான படையினர் தரையிறக்கப்பட்டு வருகின்றனர்.

இதேசமயம், முல்லைத்தீவு மணலாறு பிரதேச கடற்பரப்புகளில் சகல கடல்வழி போக்குவரத்துக்களையும், கடல் தொழில்களையும் படையினர் தடை செய்துள்ளனர்.

ஸ்ரீலங்கா படையினர் அலம்பிலில் இருந்து குமுழமுனைக்கு முன்னேறுவதற்கு கடந்த மாதம் 2 ஆம் திகதியில் இருந்து 9 ஆம் திகதி வரை தீவிர முயற்சிகளை மேற்கொண்டும் அது வெற்றி பெறவில்லை என்பது தெரிந்ததே. (ஓ)

### கரும்புலிகள் தினம் நேற்று குடாநாட்டில் அனுஷ்டிப்பு

கரும்புலி கப்டன் மில்லரின் ஐந்து ஆவது ஆண்டு நினைவஞ்சலி நேற்று குடாநாடு எங்கும் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் முதல் கரும்புலி வீரனான கப்டன் மில்லரின் நினைவு நாள் தமிழீழத்தின் கரும்புலிகள் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது

கரும்புலிகள் தினத்தையொட்டி குடாநாட்டின் பல இடங்களிலும் நேற்று பல வேறு அஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. கரும்புலிகளின் படங்கள் வைக்கப்பட்டு திருவிளக்குகள் ஏற்றப்பட்டிருந்தன.

கப்டன் மில்லர் வெடிகுண்டுடன் சென்று நெல்லியடியில் இருந்த ஸ்ரீலங்கா இராணுவ முகாமைத் தகர்த்து எறிந்தார் என்பது தெரிந்ததே.

மில்லரைத் தொடர்ந்து மற்றும் கரும்புலிகளான கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத், மேஜர் காந்தரூபன், மேஜர் டாம்போ, லெப். கேணல் போர்க், கப்டன் சிதம்பரம், கப்டன் ஜெயந்தன் ஆகியோர் களத்தில் வீரமரணமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### துர்க்கை ஆலயத் தாக்குதல்; பிரேமாவுக்கு வருத்தமாம்!

கொழும்பு, ஜூலை 6

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோயில் மற்றும் வற்றாப்பளை அம்மன் கோயில் ஆகியவற்றின் மீது படையினர் நடத்திய தாக்குதல்கள் குறித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா வருத்தம் தெரிவித்திருக்கிறார்.

இந்துப் பேரவைக்கு ஜனாதிபதி பிரேமதாஸா எழுதிய கடிதம் ஒன்றிலேயே தமது வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்.

''த ஐலண்ட்'' பத்திரிகையை மேற்கோள் காட்டி பி. பி. ஸி. இத்தகவலை நேற்று வெளியிட்டது.

இந்த இரு தாக்குதல்களினாலும் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து விசாரித்து தமக்குத் தகவல் தரும்படி சம்பந்தப்பட்ட அரச அதிபர்களை ஜனாதிபதி பிரேமதாஸா கேட்டிருப்பதாகவும் இந்துப் பேரவை தரப்பில் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (உ-10)

### பல்கலைக்கழக அனுமதி முறை

## அரசின் திட்டத்தை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு!

### தாக்கல் செய்ய 15 பேர் கொண்ட குழு தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 6

பல்கலைக்கழக அனுமதி தொடர்பாக அரசு அறிவித்துள்ள உத்தேச திட்டத்தை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்படவிருக்கிறது. இதற்கான முன்னேற்பாடு நடவடிக்கையை மேற்கொள்ள 15 பேர் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

உயர்கல்வி அமைச்சர் நாடாளுமன்றத்தில் வெளியிட்ட முடிவு சம்பந்தமாக மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வெளியுறவுச் செயலாளர் மாநாடு நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 6

சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவுச் செயலாளர்கள் மாநாடு நேற்றுக் காலை கொழும்பு ஒபரோய் ஹோட்டலில் ஆரம்பமானது.

இலங்கை வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்தினா தலைமை வகித்தார்.

இம்மாநாடு இன்றும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

தூய இன ஜமுனா பாறி ஆடு கிடாய்க்குட்டியுடன் விற்பனைக்கு உண்டு. ந. கணேஸ்வரன், இல. 24, நாவலடி லேன், பேய்ச்சி அம்மன் கோவிலடி, வண். வடமேற்கு. (21655)

### தேவை

கோழிக்கூடு தேவை. தொடர்பு: R. ஜோசேப், இல. 13/5, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். (21652)

### மணமகன் தேவை

28 வயது, B Sc. (கணிதம்) கொழும்பில் ஆசிரியை, றோமன் - கத்தோலிக்கம். கத்தோலிக்க சமயத்தை ஏற்றுக்கொள்வோரும் தொழில், வயது குறிப்பிட்டு கடிதத் தொடர்பு கொள்க. R. Rudra, Advocate, V. M. Road, Pt. Pedro. [21649]

### பயிற்சிப் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [கி-2746]

### O/L – 92 வினாத்தாள்

O/L Dec. 92 பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். பரீட்சைப் பகுதி: Bond Institutes, யாழ்ப்பாணம். [கி/2747]

### வினா - விடைகள்

க. பொ. த. உயர்தர/ சாதாரண மாணவர்களுக்கு வழி காட்டியாக கடந்த கால கணக்கியல், வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B.Com), றோயல் கல்லூரி ஆசிரியர். கிடைக்குமிடங்கள்; மண்டேலா றேடர், யாழ்ப்பாணம்; S.K சாமி அன்கோ, நெல்லியடி. [21618]

### சங்கீதம்

சங்கீதம் பயிலும் அனைவரும் அவசியம் வைத்திருக்க வேண்டிய புத்தகம். சங்கீதம் வினா-விடை, ஆக்கம்: ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்த சர்மா, [சங்கீத ஆசிரியை] விலை ரூபா 24/-. (21643)

---

SHAMROCK
யாழ். சுண்டிக்குளி.

கணக்கியல்
திரு. சௌந்தி
93 -
வங்கிக்கணக்கு
இணக்கக்கூற்று
ஆரம்பம்:
நாளை செவ். 5 - 00
[21653]

---

# கடற்படைக் கப்பல் மீது புலிகள் ஆர். பி. ஜி. தாக்குதல்

வெற்றிலைக்கேணிப் பகுதி கடற்கரையில் படையினரை தரையிறக்கிக் கொண்டிருந்த இரண்டு கடற்படைக் கப்பல்கள் மீது கடந்த புதன்கிழமை விடுதலைப் புலிகள் ஆர். பி. ஜி. ரொக்கட் தாக்குதலை நடத்தியதாக கொழும்பில் தகவல் வெளியிடப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று படையினர் காயமடைந்ததாகவும் கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. (த-3)

---

## 8 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### ★ செல்வி ச. சாருமதி ★

சாவகச்சேரி வடக்கு, மீசாலையைச் சேர்ந்த சந்திரபாலன் - யோகேஸ்வரி தம்பதிகளின் அருமைப் புதல்வி சாருமதி தனது எட்டாவது பிறந்த நாளை வெகு விமரிசையாக இன்று அவரது இல்லத்தில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தம்பி, தாத்தா, அப்பம்மாமார், ஐயா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், சித்தா, அக்காமார், அண்ணாமார், உற்றார், உறவினர், நண்பர்கள் பல்கலைகளும் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றார்கள்.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை. [21651]

---

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

### சைவசித்தாந்தத்தில் வெளிவாரியாக பட்டப் படிப்பினை

மேற் கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் அனுமதிகள் கோரப்பட்டுள்ளன.

இவ்விரிவுரையில் பங்குபற்ற விரும்புபவர்கள் **10 — 07 — 1992**க்கு முன்னர் விவரங்களையும், நேர அட்டவணையையும் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
எஸ். அருள்நங்கை.

[கி-2902]

---

யாழ்ப்பாண மாநகர சபை

### சித்த ஆயுர்வேத வைத்தியர்களுக்கான (பதிற்கடமை)

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாண மாநகரசபையில் பணியாற்றும் சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் விடுமுறையில் செல்லும் காலங்களில் சேவை தடைப்படாமல் இயங்குவதற்கு வசதியாக பதிற்கடமை புரிவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:**

1. சித்த ஆயுர்வேத தராதரத்தை உடையவர்களாகவும், வைத்தியராகப் பணிபுரியப் பதிவு செய்யப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 21 தொடக்கம் 45 வரை
3. மாநகரசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. விண்ணப்பதாரிகள் தாமே தயாரித்த விண்ணப்பத்துடனும், தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும், தேசிய அடையாள அட்டையுடனும் எதிர்வரும் 11 – 07 – 1992 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு நல்லூரிலுள்ள மாநகரசபை அலுவலகத்திற்குச் சமுகமளிக்கவும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
03 – 07 – 1992 [சி-2200]

---

## அரசுக்கெதிரான
# நம்பிக்கையில்லா பிரேரணை அனுபந்தத்தில் சேர்ப்பு!

கொழும்பு, ஜூலை 6

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் கொண்டுவரவிருக்கும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தப் புதிய பிரேரணை எப்போது விவாதத்துக்குவரும் என்பது இன்னும் நிச்சயமாகவில்லை. திகதி குறிப்பிடாத பிரேரணை முன் அறிவித்தலாகவே ஒழுங்குப் புத்தக அனுபந்தத்தில் இது இடம்பெற்றுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா உட்பட எட்டு எதிர்க்கட்சி எம். பிக்கள் இந்தப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கொலைப்படைக் குழு ஒன்றின் மூலம் அரசுக்கு எதிரானவர்களை கொலை செய்யத் தூண்டியது —

விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கியது — ஆகிய காரணங்களுக்காக அரசு உடனடியாக பதவி துறக்க வேண்டும் என்று அந்தப் பிரேரணையில் கோரப்பட்டுள்ளது. [த-3]

# போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவக் குழுக்கள்

அராலி, ஜூலை 6

போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவுவதற்காக, யாழ். மாவட்டத்தில் உள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும், அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்கு குழுக்கள் அமைக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

இக்குழுக்களில் அரசாங்க உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள், சனசமூக நிலைய பிரதிநிதிகள், ஏனைய பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

இக்குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்க பொறுப்பாக இருக்கும் எனவும் தெரிய வருகின்றது. [இ-12]

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 6

பண்டத்தரிப்பு, கோட்டத்தில் ஜி. சீ. ஈ. [சா/தர] வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று, நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

ஜி. சி. ஈ [சா/தர] 1992 பரீட்சை சம்பந்தமாகவே இந்த கலந்துரையாடல் நடைபெறவிருக்கிறது. (ஓ)

## பிரிட்டன் தலைமை

கொழும்பு, ஜூலை 6

ஐரோப்பிய சமூக அமைப்பின் தலைமைப் பதவியை இம்மாதம் முதலாம் திகதியில் இருந்து பிரிட்டன் ஏற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

இணுவில் இளந்தொண்டர் சபையின் ஆதரவில்

### தவில்மேதை N. R. சின்னராசா

## ஞாபகார்த்த விழா

6 - 7 - 91இல் சிவபதமடைந்த அன்னாரின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி இன்று இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர் சபையினரால், சபை மண்டபத்தில் பிற்பகல் 5-00 மணியளவில் கலாநிதி இ. விக்கினேஸ்வரன் தலைமையில் நினைவு தின விழா நடைபெறும்.

இவ்விழாவின்போது, 4 - 6 - 92 அன்று அமரரின் நினைவாக நடைபெற்ற மிருதங்க தாள வாத்தியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான தங்கப் பதக்கங்களும் மற்றும் பரிசில்களும் வழங்கப்படும்.

இங்ஙனம்
இளந்தொண்டர் சபையினர்

[21658]

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ். கிளை, தலைமையகம்.

### உதவித் தாதிப் பயிற்சிநெறி

மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கணவனை இழந்தோர், விதவைகள், ஊனமுற்றோர், அநாதைகள் ஆகியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 16-07-92 வியாழக்கிழமைக்கு முன்பாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். 18-07-92 சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித்தனிக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
03-07-1992. [கி-2198]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### உள்நோக்கம் இழுத்தடிப்பே!

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் யோசனை தெரிவிக்க இருப்பதாக செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா தலைமையில் இது தொடர்பான குழு ஒன்று நியமிக்கப்பட்டு இக்குழுவிடம் அமைச்சர்கள், ஐ. தே. க. எம். பிக்கள், ஐ. தே. க. உறுப்பினர்கள் யோசனை தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சி எம். பி. திரு. மங்களமுனசிங்கா தலைமையில் சுமார் ஒரு வருடத்துக்கு முன்னர் அரசாங்கத்தினால் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தெரிவுக் குழு நியமிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் தெரிவுக்குழு தொடர்பாக பெரிதாக விளம்பரப்படுத்தப்பட்ட போதிலும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக் கட்சியோ அரசியல் தீர்வுக்கான யோசனை எதனையும் தெரிவிக்காத நிலையில்— அதாவது பிரச்சினையில் இருந்து நழுவும் நிலையில் கடந்த ஓராண்டு காலம் இழுத்தடிக்கப்பட்டிருந்தது.

இப்படியான நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி தற்போது இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளைப் பெற குழு ஒன்றை அமைத்திருப்பது இனப்பிரச்சினைத் தீர்வை மேலும் இழுத்தடிக்கும் தந்திரோபாயமாகும்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முயலுவதாக வெளி உலகுக்குக் காட்டிக் கொண்டு இராணுவத் தீர்வை நாடிச் செல்லும் கபடத்தனம் இது என்பதில் சந்தேகம் இல்லை.

தெரிவுக்குழுவின் அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ள தற்போதைய இழுபறி நிலையிலேயே அரசியல் தீர்வு பற்றிய யோசனையைத் தயாரிப்பதற்காக ஐ. தே. க. குழு ஒன்றை நியமித்திருக்கிறது.

தனது இராணுவ நோக்கங்கள் நிறைவேறும் சமயத்தில் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கையும் வெளிவந்துவிடும் என்றும் —

விடுதலைப் புலிகளின் பலத்தை அடக்கிவிட்டு தனக்கு ஏற்ற ஒரு தீர்வை முன்வைக்கலாம் என்றும்— அரசு முதலில் கருதியது.

ஆனால் விடுதலைப் புலிகளின் கடுமையான எதிர்ப்பினால் தாம் நினைத்த— குறித்த — காலத்திற்குள் இராணுவ வெற்றியை ஈட்ட முடியாது என்பது அரசுக்கு உள்ளூரத் தெரிந்திருக்க வேண்டும்.

இந்தச் சூழலிலேயே அரசியல் தீர்வுகாண நியமிக்கப்பட்ட தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளையும் தாமதப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன என்று கொள்ள வேண்டியுள்ளது.

இதன் விளைவே பிரதமர் தலைமையில் குழு ஒன்றை அமைந்துள்ள அரசின் ஆகப்பிந்திய நடவடிக்கை ஆகும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு உட்பட தமிழ் மக்களின் சகல பிரதான பிரச்சினைகளிலும், சிங்கள மக்களின் மேலாதிக்கத்தை தளர்த்துவதில்லை என்ற நிலைப்பாட்டை அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் கொண்டிருக்கும் வரை தமிழ் மக்களுக்கு எந்தவித உரிமையும் கிடைக்கப் போவதில்லை.

---

தமிழ் மக்கள் மீதான

# ராணுவ நடவடிக்கைகளை அரசு நிறுத்த வேண்டும்!

## சுவிஸ் தமிழர் அமைப்பு கோரிக்கை

பேர்ண், ஜூலை 6

''வடக்கு மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடைகளையும், இராணுவ நடவடிக்கையையும் நிறுத்தி தமது தாயகத்தில் தமிழ் மக்கள் சாதாரண நிலையில் வாழ வழிவகுக்க வேண்டும்.''

இப்படியான கோரிக்கை ஒன்றை சுவிட்சர்லாந்து தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பு விடுத்துள்ளது.

சுவிஸில் உள்ள இந்தியத் தூதரிடமும், சர்வதேச சமூகத்திடமும் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக தமிழ்நாட்டுக்கு செல்லும் தமிழர்களை கண்டபடி கைதுசெய்து தடுத்து வைத்திருப்பதை நியாயப்படுத்த முடியாது என்றும்— முற்றிலும் வேண்டப்படாத இந்த நடவடிக்கைகளை நிறுத்துமாறும் அந்த அமைப்பு கோரியுள்ளது.

(த-3)

## கடற்படைச் சிப்பாய் சுருக்கிட்டு தற்கொலை

இலங்கைக் கடற்படையில் கடந்த பெப்ரவரியில் சேர்ந்த 21 வயதான டபிள்யு. எம். கே. பி. வீரசூரியா என்பவர் திருமலைக் கடற்படைத் தளத்தில் உள்ள திஸ்ஸவிகாரை வளவில் அரலிய மரம் ஒன்றில் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

கடற்படையில் சிப்பாயாகச் சேர்ந்த இவர் சில தினங்களில் தப்பி ஓடிவிட்டார் என்றும், உறவினர் ஒருவர் இவரைப் பிடித்துக்கொண்டு வந்து மீண்டும் கடற்படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

[த-எ]

## கடவுச் சீட்டுப் படங்கள்; அளவுகளில் மாற்றம் வரும்

கொழும்பு, ஜூலை 6

கடவுச்சீட்டு எடுப்பதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய புகைப்படங்களின் அளவு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மாற்றப்படவிருப்பதாக குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் டபிள்யூ ஈ. பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

இயந்திரத்தினால் வாசிக்கப்படக்கூடிய ஒரு புதிய தொடர் கடவுச்சீட்டுகள், சர்வதேச சிவில் விமான போக்குவரத்து ஸ்தாபனத்தால் அனுமதிக்கப்பட்ட பரிமாணங்களுக்கமைய, இம் மாதம் 15 ஆம் திகதி முதல் வழங்கப்படவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய தொடர் கடவுச்சீட்டுக்கான புகைப்படங்களின் அளவு 4.5 செ. மீ x 6.5 செ. மீ என்றும் அவர் அறிவித்துள்ளார்.

முன்னர் 6 செ. மீ x 4.5 செ. மீ அளவிலான படங்களே வழங்கப்பட்டு வந்தன.

(த-3)

## ஊர்காவல் படை உறுப்பினர் தற்கொலை

கொழும்பு, ஜூலை 6

கந்தளாய் ஊர்காவல் படை உறுப்பினர் ஒருவர் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக பொலீஸ் தலைமையகம் தெரிவித்தது.

தற்கொலை செய்து கொண்டவர் பி. பி. நாணயக்கார என்று அடையாளம் காணப்பட்டது.

(த-3)

## போர் முனையிலுள்ள படையினருக்கான உணவை உடன் அனுப்ப சிசில் பணிப்பு

கொழும்பு, ஜூலை 6

போர்முனையில் உள்ள படையினருக்கு ருசியான உணவைத் தயாரித்து அனுப்புவதற்கு இயன்றளவு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்தின உணவு விநியோகத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகளைப் பணித்திருக்கிறார்.

ஒபரேஷன் பலவேகய - 2 இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரை வெற்றிலைக் கேணிக்குச் சென்று பார்வையிட்ட பின்னரே இந்த பணிப்புரையை தளபதி விடுத்தார்.

கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியுடன் விமானப்படை மற்றும் கடற்படை ஆகியவற்றின் தளபதிகளும் வெற்றிலைக்கேணிக்குச் சென்று இருந்தனர்.

ஆயுதங்கள் மற்றும் போர்த் தளபாடங்கள் மற்றும் உணவு வகைகளை போர்முனைக்கு அனுப்புவதில் தாமதம் காட்டாது விரைந்து செயல்படும்படி அவற்றின் விநியோகத்துக்குப் பொறுப்பான அதிகாரிகளை இராணுவத் தளபதி பணித்தார்.

இப்படிச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[த-எ]

## செய்தியாளர் மாநாட்டில் 'ஹேமா' கண்ணீர் சிந்தினார்

கொழும்பு, ஜூலை 6

புத்தளையின் அண்மையில் இடம்பெற்ற 'கம் உதாவ'வில் நடந்த செய்தியாளர் மாநாடு ஒன்றில் ஜனாதிபதி பிரேமதாஸாவின் பாரியார் ஹேமா பிரேமதாஸா பகிரங்கமாக அழுதார்.

''எனது தலைமையிலான சேவா வனிதா இயக்கம் தனது சமூகப்பணிகளை மேற்கொள்ள முறையான வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. நானே சொந்தமாக எல்லாவற்றையும் மேற்கொள்ளவேண்டி இருக்கிறது. எனக்கு என்று அலுவலகம் ஒன்று கிடையாது; அந்தரங்கச் செயலாளர் ஒருவர் கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் பாரியார் திரு. எலினா ஜெயவர்த்தனாவுக்கு அலுவலகம் ஒன்றும் தனியான டெலிவிஷன் அமைப்பு ஒன்றும் வழங்கப்பட்டிருந்தது. எல்லாவற்றுக்கும் நான் ஜனாதிபதி செயலகத்தைச் சேர்ந்த ஈவான் கூரேயையும் அந்தனி பெர்னாண்டோவையும் தான் உதவிக்கு அழைக்க வேண்டியிருக்கிறது. அவர்களும் என் நிலை கண்டு வருந்துகின்றனர்.

இவ்வாறு திருமதி ஹேமா பிரேமதாஸா உணர்ச்சிவசப்பட்ட நிலையில் செய்தியாளர் மாநாட்டில் பேசினார். அப்போது அவர் பகிரங்கமாக அழுதே விட்டார் என்று 'தஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது.

[த-எ]

## கல்வி கூடங்களின் தேவைகளை நிறைவேற்றுவது சகலரதும் கடமை

### வேம்படி பழைய மாணவர் சங்க வைரவிழாவில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 6

நெருக்கடியான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையின் முக்கிய தேவை கல்வி. அதனை வழங்கும் பாடசாலைகளும் கல்லூரிகளும் தமது தேவைகளை முற்றாகப் பெறமுடியாத நிலையில் பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் செயற்பட்டு வருகின்றன. இந்நிலையில் நாம் சமூகத்தில் உயர்ந்த நிலையை எட்ட எமக்குக் கல்வியறிவூட்டிய ஸ்தாபனங்களின் தேவைகளைப்பூர்த்திசெய்ய, முடிந்த அளவு உதவிகளை வழங்க வேண்டியது எமது கடமை மட்டுமன்றி கட்டாயமும் கூட, வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவர்கள் இதனை நன்கு உணர்ந்துள்ளனர்.

நேற்று நடைபெற்ற யாழ். வேம்படி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகித்துப் பேசுகையில், பழைய மாணவர் சங்க தலைவியும் யாழ். இலங்கை வங்கியின் பிரதான முகாமையாளருமான திருமதி கே. துரைராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது;

எமது கல்லூரியின் தேவைகளை நிறைவேற்ற அரசின் உதவி கிடைக்கும் என்று நாம் எதிர்பார்ப்பது தவறு. எம்மால் இயன்றவரை நாம் எல்லோரும் இணைந்து உதவி வழங்க வேண்டும் என்றார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாசாரியார் பேசும்போது—

நாட்டிற்கு நல்ல சமுதாயத்தை ஆக்கித் தருவது கல்விக் கூடங்களே. பெற்றோரை, குருவை வணங்கிய பின்னரே தெய்வத்தை வணங்க வேண்டும். அதுவே பெருமை. நாம் படித்த கல்லூரியைக் கூறி நான் இக் கல்லூரியின் பழைய மாணவன் என்று களிகூருவதில் காணப்படும் மகிழ்வு வேறு எதிலும் இல்லை என்றார்.

யாழ். மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த வண. ஏ. டபிள்யூ ஜெபநேசன் தனது உரையில்—

ஒட்டுமடம் பகுதியில் உள்ள மெதடிஸ் திருச்சபையின் ஒரு பகுதியை இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கமே சுமார் 70 ஆண்டுகளுக்கு முன் கட்டிக் கொடுத்தது. வேம்படி மகளிர் கல்லூரிக்கும் மெதடிஸ்த திருச்சபைக்கும் தொடர்புகள் உண்டு. பிள்ளையின் உயர்வில் மகிழும் பெற்றோரைப் போன்று பழைய மாணவர் சங்கத்தின் வைரவிழா கண்டு நாம் மிகவும் சந்தோஷமடைகின்றோம் என்றார்.

முன்னதாக கல்லூரி மாணவிகள் பாண்ட் வாத்தியம் இசைக்க, கல்லூரியின் ... யாகக் கலந்து கொண்ட திருமதி ஆர். சோமசேகரம் ஏற்றி வைக்க நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

கல்லூரியின் ஸ்தாபகர் பேர்சிவல் பாதிரியாரின் திருவுருவப் படத்தை அதிபர் செல்வி ஆர். இராஜரட்ணமும், முன்னாள் அதிபர்கள், உப அதிபர்கள் ஆகியோரின் பெயர்ப்பட்டியலை திருமதி கே. துரைராஜா, செல்வி ஜி. வடிவேலு ஆகியோரும் திரைநீக்கம் செய்து வைத்தனர்.

[த-111]

## சு. க. நிர்வாகிகள் தெரிவு; மீண்டும் ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜூலை 6

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிர்வாகிகளைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி இக் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது.

தலைவர் பதவி தவிர்ந்த ஏனையவற்றுக்குப் போட்டியிட பலர் முன் வந்திருப்பதால் அங்கத்தவர் மத்தியில் பிளவு ஏற்படுவதைத் தவிர்க்கவே கூட்டம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

சந்திரிக்கா குமாரணதுங்காவை கட்சியின் நிர்வாகக் குழு அங்கத்தவராக திருமதி சிறிமா பண்டாரநாயக்கா நியமனம் செய்துள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது.

[த]

## ஹெரோயினுடன் பிடிபட்ட தமிழர்

கடந்த புதன் இரவு சென்னையில் இருந்து திரும்பிய தமிழர் ஒருவரிடம் இருந்து ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்து கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்.

கொழும்பைச் சேர்ந்த ரி. சுப்பிரமணியம் என்பவரிடம் இருந்தே இவை கைப்பற்றப்பட்டன.

(த-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜீவ் கொலை வழக்கு:

# ரூ. 50 லட்சம் செலவில் புதிய நீதிமன்றக் கட்டடம்

## சிறைச்சாலையில் அமைக்கப்படும்

சென்னை, ஜூலை 6

ராஜீவ் காந்தி கொலை வழக்கின் விசாரணைகளை இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் மேற்கொள்ள சென்னை பூந்தமல்லியில் உள்ள உப சிறைச்சாலையில் ஐம்பது லட்சம் ரூபா செலவில் நீதிமன்றம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

இக்கொலை வழக்கில் சாட்சிகளாகக் காட்டப்பட்டுள்ளவர்களிடம் இருந்து எதிர்வரும் செப்டம்பர் மாதம் தொடக்கம் சாட்சியங்கள் பதிவு செய்யப்படும் என்று விசேட நீதிவான் எஸ். எம். சித்தீக் தெரிவித்தார். [இ-எ]

# ஒலிம்பிக் போட்டிகளில் மீண்டும் பென்ஜோன்சன்!

பார்சிலோனா, ஜூலை 6

பிரபல ஓட்டப்பந்தய வீரர் பென்ஜோன்சன் இம்மாதம் 25 ஆம் திகதி ஸ்பெயின் -பார்சிலோனா நகரில் ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வது உறுதியாகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது.

பார்சிலோனா போட்டிகளில் கலந்துகொள்வதற்கான தகுதியைப் பெறும் பூர்வாங்கப் போட்டியில் நூறு மீற்றர் தூரத்தை 10.1 வினாடிகளில் இவர் ஓடி முடித்தார். இதன் மூலம் பார்சிலோனா போட்டியில் பென்ஜோன்சன் கலந்துகொள்வது உறுதியாகிவிட்டது.

1988 இல் தென்கொரியத் தலைநகர் சோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பென்ஜோன்சன் 100 மீற்றர் தூரத்தை 9.79 வினாடிகளில் ஓடிமுடித்து, தங்கப் பதக்கத்தைப் பெற்றிருந்தார் என்பதும் —

பின்னர் அவர் போதை மருந்து பாவித்துவிட்டு ஓடினார் என்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவரிடமிருந்து தங்கப் பதக்கம் பறிக்கப்பட்டது என்பதும் தெரிந்ததே.

அப்போட்டியில் இரண்டாவதாக வந்த கார்ல் லூயிஸுக்கு அத் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது.

எனினும்—

எதிர்வரும் ஒலிம்பிக் போட்டியில் நூறு மீற்றர் மற்றும் இருநூறு மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளும் தகுதியைப் பெற கார்ல் லூயிஸ் தவறிவிட்டார்.

போதைவஸ்து பாவித்துவிட்டு 1988 ஒலிம்பிக்கில் ஓடினார் என்ற குற்றச்சாட்டுக்காக பென்ஜோன்சன் உலகப் போட்டிகளில் கலந்துகொள்ள இரண்டு ஆண்டு காலத் தடைவிதிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## அரசின் திட்டத்தை ..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. சு. டிவகலால கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கப் பிரதிநிகள், பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக அதிகாரிகள், ஆசிரியர்கள், மாணவர் அவைப் பிரதிநிதிகள் உட்பட பலர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அரசின் உத்தேச திட்டத்தை எதிர்த்து உடன் வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற கருத்தை பலரும் அப்போது வெளியிட்டனர்.

புதிதாக நியமிக்கப்பட்ட குழுவில் அதிபர்கள் சங்கத் தலைவர், செயலாளர், தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர், பொருளாளர், பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவர், செயலாளர், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர், செயலாளர் யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர், செயலாளர் ஆகியோரும், மற்றும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் மூவரும் இடம் பெறுகின்றனர்.

உயர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்ய செலவாகும் நிதியை பாடசாலைகள், பெற்றோர்கள், பொது நிறுவனங்கள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து சேகரிப்பதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று கூட்டத்தில் கலந்துகொண்ட சிலர் உடனேயே தாமாகவே முன்வந்து நிதி வழங்கினர்.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைக்கப்பட்ட குழுவினர் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது

இந்த விடயம் தொடர்பாக மனுத்தாக்கல் செய்ய நிதி உதவி வழங்க விரும்பும் பெற்றோர்கள், மற்றும் நலன் விரும்பிகள், யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க அலுவலகத்தில் இன்று முதல் அதனைச் செலுத்தலாம் என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

அரசின் உத்தேச திட்டத்தை மறுபரிசீலனை செய்யுமாறு உயர் கல்வி அமைச்சரிடமும், மற்றும் சம்பந்தப்பட்ட சகலரிடமும் நேரில் சென்று வற்புறுத்த ஐந்து பேர் கொண்ட குழு ஒன்றும் நேற்றைய கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஹாட்லிக் கல்லூரி அதிபர், யாழ். இந்துக் கல்லூரி அதிபர், சட்டத்தரணி செந்தில்நாதன், தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் மற்றும் பெற்றோர்கள் சார்பில் திரு. திலகநாதன் ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுகின்றனர். [உ 5]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

புல்லாவெளியில் நேற்று விமானத்தைச் சுட்டு வீழ்த்திய தாக்குதலில் வீரவேங்கை தமிழினியன் அல்லது ஜஸ்சன் (எதிர்மன்னசிங்கம் ஆனந்தவேல் - சுழிபுரம் வடக்கு] என்பவர் வீரமரணமடைந்தார்.

## இளைஞர் பலி

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு பளை பட்டினப் பகுதியில் விமானம் குண்டு வீச்சு நடத்தியதில் கால் ஊனமான இளைஞர் ஒருவர் பலியானார்.

குண்டுகள் வீட்டின் மேல் விழுந்து வெடித்ததால் நடக்க முடியாமல் வீட்டினுள் தங்கி இருந்த அந்த இளைஞர் உயிரிழந்தார்; வீடு தரைமட்டமானது. (ஓ-117)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 6

யாழ். மாவட்ட பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் இன்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதும் இந்த ஆட்டம் இன்று காலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். [உ]

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 6

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று இன்று திங்கள் பிற்பகல் 3 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெற இருக்கிறது.

சாரணர் பயிற்சி, நிர்வாகம், சேவை என்பன குறித்து இக் கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது. (ஓ-3)

## உற்சவங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

ஏழாலை வசந்த பூஷணி அம்மன் ஆலயத்தின் ஆனி உத்தரத் திருவிழா இன்று காலை 8மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞான வைரவர் கோவில் ஆனி உத்தரத் திருவிழா இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு ஸ்ரீ பழனி ஆண்டவர் கோவில் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி நடைபெறும் (த-154-162)

## கோவை மகேசன் காலமானார்

சென்னை, ஜூலை 6

''சுதந்திரன்'' பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரான கோவை மகேசன் நேற்று முன்தினம் தமிழ் நாட்டில் காலமானார்.

இவர் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராக விளங்கியவர்.

இவர் நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-த)

## புதுக்காட்டில் குண்டு வீச்சு

தென்மராட்சி, ஜூலை 6

புதுக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8. 10 மணிக்கு இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

இதேசமயம்—கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 30 மணியளவில் புலோப்பளை கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த படகு மீது ஹெலி ஒன்று தாக்குதல் நடத்தியது. (ஓ-117)

# ஹொக்கிச் சுற்றுப்போட்டி நாளைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 6

''உதயன்'' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் நடத்தும் ஹொக்கிச் சுற்றுப் போட்டியில் நாளை நடைபெறவிருக்கும் ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 6. 15 மணி;- சென். ஜோன்ஸ் கல்லூரி சிவப்பு அணி எதிர் ஜொனியன்ஸ் அணி.

★ காலை 7. 00 மணி:- சென் ஜோன்ஸ் கல்லூரி கறுப்பு அணி எதிர் பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி.

★ பிற்பகல் 3. 00 மணி:- பல்கலைக் கழக கோல்ஸ்ட் அணி எதிர் ''ஷப்றா'' அணி;

★ பிற்பகல் 3. 30 மணி:- பொற்பதி ஐக்கிய விளையாட்டுக்கழக அணி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி அணி.

★ மாலை 4. 00 மணி:- ஜொனியன்ஸ் அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி.

நாளைய காலை ஆட்டங்கள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும். மாலை ஆட்டங்கள் எங்கு நடைபெறும் என்பது பற்றிய அறிவிப்பு இன்று வெளியிடப்படும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சுற்றுப்போட்டியில் இன்று காலை இரு ஆட்டங்களும் மாலை மூன்று ஆட்டங்களும் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன என்பது தெரிந்ததே. [உ]

## இலவச சீருடைக்கு 90 லட்சம் மீற்றர் துணி

அடுத்த ஆண்டு பாடசாலை மாணவருக்கு இலவசமாக சீருடை வழங்க 90 லட்சம் மீற்றர் துணி தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. [இ-எ]

## வலைப்பந்தாட்டம்

மூளாய் ஜூலை 6

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்றும் நாளையும் நடைபெறும்.

இன்று மாலை 4 மணிக்கு மூளாய் சைவப்பிரகாச வித்தியசாலை விளையாட்டு மைதானத்தில் 17 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையிலான போட்டிகள் நடைபெறும் 19 வயதுக்குட்பட்ட அணிகளுக்கிடையிலான போட்டிகளை நாளை மாலை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது [உ-99]

### சினச்சகனட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்த வேளையில் விடுதலைப் புலிகளின் விமான எதிர்ப்புப் படைப் பிரிவினர் விமானத்தை நோக்கி எதிர்த் தாக்குதலை நடத்தி அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுட்டு வீழ்த்தப்பட்ட விமானத்தின் சகல பாகங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர் அந்த விமானத்தைச் செலுத்திய விமானியின் சடலமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நான்கு என்ஜின்களைக் கொண்ட இந்த 'வை - 8' ரக விமானம் 12 இருக்கைகளை உடையது. இது முன்னர் பெரும்பாலும் அமைச்சர்கள், அதிகாரிகள் போன்றோரின் போக்குவரத்துக்குப் பாவிக்கப்பட்டது

ஆனால் அவ் விமானம் பின்னர் தமிழ் மக்களின் குடியிருப்புகள் மீது குண்டு வீச்சு நடத்துவதற்கான, குறிப்பாக பீப்பாய்க் குண்டுகளை வீசும் குண்டு வீச்சு விமானமாக மாற்றப்பட்டது.

#### முன்னரும் வீழ்த்தினர்

1990 ஆம் ஆண்டு செப்டம்பர் 13 ஆம் திகதி — கோட்டையில் ஸ்ரீலங்கா இராணுவம் நிலைகொண்டிருந்த வேளையில் — சியாமா செட்டி பொம்மர் விமானத்தை விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்தினர் என்பதும்—

அந்த விமானத்தின் விமான ஓட்டியும் இறந்தார் என்பதும் —

மண்டைதீவுக் கடலில் வீழ்ந்த விமானத்தின் சில பாகங்களையும் புலிகள் கைப்பற்றியிருந்தனர் என்பதும் தெரிந்தவையே.

இதேவேளை —

இயக்கச்சிப் பகுதியில் நேற்று மாலை விமானத்தின் சிதைவுகளைத் தேடி எடுப்பதில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளனர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-த]

## அகசி, ஸ்டெபி சாம்பியன்

லண்டன், ஜூலை 6

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் அமெரிக்க வீரரான அன்ட்றே அகசி, (வயது 22) சாம்பியனானார். அவர் நேற்று விம்பிள்டனில் நடந்த இறுதியாட்டத்தில் யூகோஸ்லேவியாவின் குறோஏசியா குடியரசைச் சேர்ந்த கோரன் இவனிசவோ இச்சை 6-7, 6-4, 6-4, 1-6, 6-4 என்ற புள்ளிக் கணக்கில் — கடும் போட்டிக்கு மத்தியில்— தோற்கடித்தார்.

பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் மெனிக்க செல்லேஸைத் தோற்கடித்து ஜேர்மன் வீராங்கனை ஸ்டெபி கிராப் மீண்டும் சாம்பியனானார். [உ-10]

### வெளியுறவு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நாளை செவ்வாய்க்கிழமையும் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது.

செயலாளர்கள் மட்ட மாநாடு முடிவடைந்ததும் சார்க் அமைப்பு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாடு இம்மாதம் எட்டாம் திகதி இங்கு ஆரம்பமாகிறது.

இரண்டு தினங்கள் நடைபெறவிருக்கும் இம் மாநாட்டை ஜனாதிபதி பிரேமதாஸா தொடக்கி வைப்பார். (அ-எ)

### புல்லாவெளிப்,...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

திய துணிகர எதிர் தாக்குதலின்போது இரு டாங்கிகள் முற்றாகச் சேதமடைந்தன. இராணுவத்தினரில் பலர் உயிரிழந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

இது இவ்வாறிருக்க, நேற்று நடத்தப்பட்ட அகோரக் குண்டு வீச்சுகளினால் பச்சிலைப்பள்ளி பகுதி எங்கும் அதிர்ந்தது என்று எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இயக்கச்சி, குறிஞ்சாத்தீவு, கோயில்வயல், கொம்படி, ஊரியான் தட்டுவங்கொட்டி, உமையாள்புரம் பகுதிகளிலேயே அதிகளவில் குண்டு வீச்சுக்கள் நடத்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதிகளை நோக்கி வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஆனையிறவு இராணுவ முகாம்களில் இருந்து தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன. [ஓ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org